22. தேசிய ஒருங்கிணைப்பாளர் -UN Habitat
ஐ. அப்துல் ஹமீட் (AD ஜப்பாரின் சகோதரர்)

23. முதலாவது சமூக சேவை அமைப்பு
இக்பால் மன்றம்
ஸ்தாபக தலைவர் ஏ.எச். ஹபீப் முஹம்மட்
(இஸ்மாயில் இன்ஞினியரின் மைத்துனர்)

24. முதலாவது கலை இலக்கிய அமைப்பு
கலாவிருத்திக் கழகம்
ஸ்தாபகச் செயலாளர் யூ.எம். முஸ்தபா அதிபர்

25. முதன் முதலாக கொந்தராத்து அடிப்படையில் ஓய்வு பெற்ற பின்னும் இரு வருடங்கள் ஓய்வு பெறும் போதிருந்த பதவியிலேயே சேவையாற்றியவர்
அல் ஹாஜ் எஸ்.எல். ஆதம்பாவா **DE (1994-1996)**

26. முதன் முதலில் ஒலிபரப்புச் சேவையில் தற்காலிகமாக இணைந்து கொண்டவர்
**ஆண்**
எம்.ஐ.எல். பக்கீர்தம்பி (அதிபர், ஈழமேகம்)
**பெண்**
எம்.ஐ. சித்தி பரீதா (பரீதா இஸ்மாயில் டீச்சர்)

27. முதலாவது கட்டக் கலைஞர்
எம்.ஐ.எம். உவைஸ் (GNT காரியப்பர் மருமகன்)

28. நியூசிலாந்து ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றியவர்
எம்.ஏ.எம். ஷரீப் (இலங்கைச் சம்பியன்) 1948

29. முதல் முகாந்திரம்
ஈஸா முகாந்திரம்

30. முதல் வன்னியனார்
அலி வன்னியனார் 1930

31. முதலாவது வெளிநாட்டு தூதுவர்
எம்.ஏ.எம். ஷரீப் (இலங்கைச் சம்பியன்)

32. முதலாவது கூட்டுறவு பரிசோதகர்
எம்.பி. இப்றாலெவ்வை - 1950

33. முதலாவது ஊடகவியலாளர்
**ஆங்கிலம்**
எஸ்.எம். இப்றாலெவ்வை
**தமிழ்**
ஏ.எல்.எம். சுபைர்

34. முதலாவது கிட்டங்கி (பலகைத் தட்டு வீடு)
கோஸ்முகிடீன் போடியாரின் வீடு

35. முதலாவது பலகைத் தட்டு போட்ட கடை
செட்டியார் கடை வைத்திருந்த எம்.ஐ. முகம்மதலியின் கடை

36. முதலாவது கொங்கிறீட் தட்டு போட்ட கடை
எம்.ஏ.எம். மேர்ஸாவின் பூமரத்தடியிலுள்ள கடை

37. முதல் நில அளவையாளாராக பயிற்றப்பட்டவர்
கே.எம். தாஹிர் (காதர் மாஸ்டர் மகன்)
எஸ்.எச்.எம். மன்சூர்
(இலங்கைச் சம்பியன் சரீபின் மருமகன்)

38. முதன் முதலில் மோட்டர் சைகிள் வைத்திருந்தவர்

**ஆண்**
எம்.பி.எம். இஸ்மாயில்
(லோட்மேன் என அழைக்கப்பட்டவர்)

**பெண்**
கே.எம்.ஏ. கிருபா காரியப்பர் (கமால் காரியப்பரின் மகள்)

39. முதல் நீர்ப்பாசன காரியாலயத்தைக் கொண்டு வந்தவர்
கெரவ அன்வர் இஸ்மாயில் MP

40. சுங்க திணைக்கள உதவி ஆணையாளர்
அல்ஹாஜ். ULM. மக்கீன்

# பொது நிருவாக சேவை

1. முதன் முதல் நிர்வாக சேவையில் சேர்ந்தவர்கள் :-
**ஆண்** அல் ஹாஜ் எம்.ஐ.எம். அமீர்
(Additional Secretary)
ஜனாப் ஏ. மன்சூர் **(DS)**, ஜனாப் ஐ.எம். ஹனீபா **(DS)**
**பெண்**
திருமதி ஆர்.யூ. அப்துல் ஜலீல் **(DS)**

2. குறைந்த வயதில் நிர்வாக சேவையில் சேர்ந்தவர்கள்:-
**ஆண்**
ஜனாப் எம்.எம். நயிமுடீன் **(Deputy Secretary)**
ஜனாப் ஐ.எல்.நஸீர் **(DS)**
**பெண்**
திருமதி ஆர்.யூ. அப்துல் ஜலீல் **(DS)**
திருமதி இப்திகா தௌபீக்
**(Asst. Land Commissioner)**

3. முதன் முதலில் கணக்காளர் சேவையில் சேர்ந்தவர்:-
**ஆண்**
ஜனாப் எம்.இப்றாஹிம்
(கணக்காளர் பரிசோதனை திணைக்களம்)
**பெண்**
திருமதி உசைமா பாரிஸ் (சீனிக் காக்காவின் மகள்)

4. முதன் முதல் திட்டமிடல் சேவையில் சேர்ந்தவர்:-
அல் ஹாஜ் ஏ.ஏ. பாவா (பாவா மாஸ்டர்)

5. முதலாவது விவசாய அபிவிருத்தி சபைப் பணிப்பாளர்:-
அல்ஹாஜ் ஐ.ஏ. ஜப்பார்
AD என அன்பாய் அழைக்கப்படுபவர்)

6. முதலாவது கிராம நிலதாரி
**ஆண்** எம்.பீ. மீரா ஹுசைன் (1892)
**பெண்** எம்.ஐ. சித்தி பரீதா (புள்ளி ஹாபிஸ் மருமகள்)

7. முதன் முதலில் பொலிஸ் திணைக்களத்தில் இணைந்
கொண்டவர்கள்
எம்.எஸ்.எம்.அப்துல் காதர(IP)
ஏ.எல்.அப்துல் நபார் (IP)
எம்.எஸ்.அப்துல் மஜீட் (IP)
ஐ. அப்துல் கபூர் (IP)
எம். அப்லம் (சாஜன்ட்)
எம். ஆதம்பாவா (சாஜன்ட்)

## இல்லறத்தால் இணைந்து கொண்டவர்களில்....

01. உபவேந்தர்
அல்ஹாஜ் எம்.எல்.ஏ. காதர் (VC)
(நௌசாட் MP இன் மச்சான், மனோனின் கணவர்)

02. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி
**Hon Justice** ஏ.எச்.எம்.டி. நவாஸ்
(ஆதம்பாவா DE இன் மருமகன், ஆங்கில ஆசிரியை றிசானின் கணவர்)

03. வழக்கறிஞர்
ஜனாப் எம்.எல்.ஏ. மஜீத் (பாத்தும்மா ஆசிரியையின் கணவர்)

04. வைத்தியர்
**ஆண்**
டாக்டர். எம்.எல்.எம். நஜிமுதீன்
(நஜிமுதீன் Professor, அபூசாலி ஹாஜியாரின் மருமகன்)
**பெண்**
டாக்டர் - ஆபிதா கையூம் - **VP**
(கையூம் TA இன் மனைவி)
டாக்டர். தஸ்லீமா பசீர் (பசீர் TA இன் மனைவி)
டாக்டர். ஆரிபா றஹீம் - **RMP**
(ஏ.எல்.பி. அப்துர் றஹீம் (BSc) ஆசிரியரின் மனைவி)

05. பொதுச் சுகாதார பரிசோதகர்
சி.பி.எம். ஹனீபா (றிபா nurse இன் கணவர்)

06. கௌரவ அமைச்சர்
**Hon** பேரியல் அஷ்ரப் (அஷ்ரப் அமைச்சரின் மனைவி)

07. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
**Hon** எம்.ஐ. அப்துல் மஜீத்
(CI மஜீத் என அன்பாய் அழைக்கப்படுபவர்)

08. வன்னியனார்
அல்ஹாஜ் அப்துல் மஜீத் வன்னியனார்
(BA மஜீத் MP அவர்களின் மூத்தவாப்பா)

09. திட்டமிடல் பணிப்பாளர்
எம்.எச். அக்பர் ஹசன் (காழியார் மருமகன்)

10. விதானை
பி.எச். உதுமாலெவ்வை (தொப்பியர் விதானை)

11. வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர்
ஏ.எல்.எம். நிசார் (Dr. சலீமாவின் கணவர்)

12. நீர்ப்பாசன பொறியியலாளர்
திருமதி எம்.எஸ். றிப்னாஸ் (பைசாட் TO வின் மனைவி)

13. நீர்வழங்கல் வடிகாலமைப்பு பொறியியலாளர்
ஏ.எம். றபீக் (மக்கீன் மாஸ்டர் மருமகன்)
எம்.டி. முஹம்மட் றாசில்
(ஆதம்போடியார் மகன் றசீதின் மருமகன்)

14. சேவையர் (Surveyor)
எம்.ஐ.ஏ. காதர்
(சுல்தான் மரைக்கார் மருமகன், முஹிடின் MP இன் மச்சான்)

15. பாம் மனேஜர்
ஏ.எம். மக்கீன்
(தொப்பியர் மகன் முஹம்மது இஸ்மாயிலின் மருமகன்)

16. கல்விப் பணிப்பாளர் நாயகம் (SLEAS - 1)
எஸ்.எம்.ஏ.கபூர் **BA - 1979**
(இஸ்மாயில் பொறியியலாளரின் மருமகன்)

17. கல்விப் பணிப்பாளர்
எஸ்.எச்.எல். அலியார் - **SLEAS–II**
(அட்வகேட் ஜப்பாரின் மச்சான்)

18. பிரதிக் கல்விப்பணிப்பாளர்
டி.எல்.கே. பாவா - **SLEAS – II**
(டாக்டர் பஸ்மினின் தகப்பன், செய்னம்பு ஆசிரியையின் கணவர்)

19. தமிழ் ஆசிரியர்
எம்.ஏ. ஆதம்லெவ்வை
(குணம் மாஸ்டர், PHI றாசிக் இன் மச்சான்)

20. ISA – சிங்களம்
என்.எம். புஆத் (தாயிறா ISA இன் கணவர்)

21. தொழிநுட்ப கல்லூரி அதிபர்
அல்ஹாஜ் எம்.எஸ். மரைக்கார்தம்பி (**BSc**) – **SLEAS – I**
(மரைக்கார் தம்பி மாஸ்டர் என அழைக்கப்படுபவர்)

22. ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர்
எம். சாஹுல் ஹமீட்
(கலந்தர்லெவ்வை மரைக்கார் மூத்த மருமகன்)

23. மூன்றாம் தர அதிபர்
எம்.எஸ். அஹமட்லெவ்வை (AD ஜப்பாரின் மாமனார்)

24. அதிபர் தரம் 1
எம்.எச்.எம். பாறுக் (SH ஆயிஷா ஆசிரியையின் கணவர்)

25. ஆங்கில ஆசிரியர்கள்

**ஆண்**
யூ.எம். முஹிடீன்
(மத்திய மகா வித்தியாலய முன்னாள் பிரதி அதிபர்)

**பெண்**
திருமதி ஜீ.என். இஸ்மாயில்
(ஆங்கில ஆசிரியர் PM இஸ்மாயிலின் மனைவி)

26. சிங்கள ஆசிரியர்
எம்.டி. வபி (மரியம்பீவி ISA யின் கணவர்)

27. உடற்கல்வி ஆசிரியர்
எஸ்.எச்.எம். சாலிஹ்
(சின்னமரைக்கார் பரிசாரியின் மருமகன்)

28. நூலக முகாமைத்துவ உதவியாளர்
பி. எம். ஹிதாயதுல்லாஹ்
(காத்தான்குடிப்பார் முஸ்தபாவின் மருமகன்)

29. கணக்காளர்
ஐ. முஹம்மட் பாரிஸ்
(கணக்காளர் திருமதி உசைமாவின் கணவர்)

30. மௌலவி
எம்.ஐ.எம். அபூபக்கர்
(புத்தளத்து ஆலிம், றுஹுல்லாஹ் மௌலவியின் தகப்பன்)

31. விவசாய ஆசிரியர்
ரி. நூஹுலெப்பை
(நூஹுலெப்பை மாஸ்டர் என்று அன்பாய் அழைக்கப்பட்டவர்)

32. மௌலானா
மன்சூர் மௌலானா
(ஏ.சி.ஏ.எஸ். பார் மௌலானாவின் தகப்பன்)

33 மில் முதலாளி
ஏ.ஆர். அப்துல் றசாக் - பெஷன் றைஸ் மில் உரிமையாளர்
(S. நதீரா ஆசிரியையின் கணவர்)

34. நகைக்கடை முதலாளி
இஸட்.ஏ. பசீர் (ஈஸ்டன் ஜுவலரி உரிமையாளர்)

35. முதல் வானொலி அறிவிப்பாளர்
ஊடகவியலாளர் யூனுஸ். கே. றஹ்மான்

36. நிருவாக உத்தியோகத்தர் (AO)
எம்.ஏ. மனாப் (பாயிஸ் ஆசிரியரின் மச்சான்)

## மஜ்லிஸ் அஷ்ஷூராவின் தோற்றமும் வளர்ச்சியும் நடைமுறையும்

1921 ஆம் ஆண்டுக்கு முன் எமது பள்ளிவாசல்களின் பராமரிப்பு முறை தனிநபர்களின் செல்வாக்கின் மூலம் நடைபெற்றது. அதாவது 1800 ஆம் ஆண்டளவில் சுலைமாலெவ்வைப் போடி உமர் லெவ்வை உடையார் என்பவராலும் 1860 ஆம் ஆண்டளவில் இந்தியாவில் கல்வி கற்று உலமாவாக தாயகம் திரும்பிய அவரின் மகன் சுலைமாலெவ்வை ஆலிம் என்பவராலும் ஏற்று நடாத்தப்பட்டது. அக்காலை சின்னப்பள்ளி (முகைதீன் பள்ளி, ஜும்மா பள்ளி), பெரிய பள்ளி (கோசப்பா பள்ளி), தைக்கா பள்ளி போன்றவையும் மல்கம்பிட்டி கலந்தர், சிக்கந்தர் சியாரம், காட்டவுலியா சியாரம், கங்கத்தியப்பா சியாரம், கொண்ட வட்டுவான் வீரயடி அப்பா சியாரம் என்பன இவரின் பராமரிப்பின் கீழ் இயங்கின.

அப்போது மல்கம்பிட்டி கிராமத்துக்கு வெலிகாமத்தில் இருந்து வந்து மாவடிப்பள்ளியில் வசித்து வந்த மௌலான ஒருவர் பள்ளிக் காணிகளை அதிலும் மல்கம்பிட்டி வட்டையில் இருந்த 79 ஏக்கர் காணிகளை தனது கட்டுப்பாட்டில் வைத்து பராமரிக்க முனைந்தார். அதை தனிமரைக்காராக இருந்த சுலைமாலெவ்வை ஆலிம் அவர்கள் நீதிமன்றம் சென்று தனது செலவில் வழக்காடி மேற்படி காணிகளை பள்ளிவாசல் சொத்தாக மாற்றியமைத்தார். இப்படி இருக்கும் போது 1921 ஆம் ஆண்டு சுலைமாலெவ்வை ஆலிம் அவர்கள் இறையடி எய்தினார்.

இதன் பின்னர் ஊர் மக்கள் பின் குறிப்பிடுபவர்களைக் கொண்ட சபையை நிறுவி பள்ளிவாசல் பராமரிப்பை நடாத்தி வந்தனர். அதாவது:

1. உமர் லெவ்வைப் போடி கோஸ்முகைதீன் (தலைவர்)
2. அல்லி லெவ்வை முகம்மது இஸ்மாயில் (செயிலான் மரைக்கார்)
3. சுலைமாலெவ்வை ஆலிம் உமர் லெவ்வை (சுலைமாலெவ்வை ஆலிம் மகன்)
4. உதுமாலெவ்வைப் போடி அல்லிலெவ்வை (சேகப்பற்று வ.வி)
5. முகைதீன்பாவா முகம்மது இஸ்மாயில் (கண்ணாடி மரைக்கார்)

இவர்கள் காலத்தில் 1921–1939 வரைக்கான பள்ளிவாசல் கணக்குகள் ஒழுங்காக காட்டப்படாமையால் இவர்களுக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து மக்கள் மத்தியில் சிறிது செல்வாக்குப் பெற்றிருந்த மிஸ்கின் பாவா போன்ற பெரியார்களின் உதவியோடு 1939 ஆம் ஆண்டில் 47 ஆம் இலக்க வழக்கு தொடரப்பட்டு கணக்குகள் சரிசெய்யப்பட்டன. அத்துடன் கோட் முதலியார் தலைமையில் பின்வருபவர்களைக் கொண்ட மரைக்கார் சபை ஒன்று 1940இல் தெரிவு செய்யப்பட்டு பராமரிப்பு ஒப்படைக்கப்பட்டது. அதாவது:

1. அகமது லெவ்வை உடையார் முகம்மதலி போஸ்மாஸ்டர் (தலைவர்)
2. கலைமாலெவ்வை முகம்மதலி (கலந்தர் லெவ்வை மரைக்கார்)
3. உதுமாலெவ்வை அகமது லெவ்வை உடையார் (சுல்தான் மரைக்காரின் தகப்பன்)
4. இப்றாகிம்கண்டு மீராலெவ்வை (சக்க விதானை)
5. மீராலெவ்வை முகம்மது லெவ்வை (காலியார் ஹாஜியார்)

இவர்களில் ஓராம் பெயர்வழிகாரர் 1948 இல் இறையடி எய்த, அவரின் இடத்துக்கு மிஸ்கின் பாவா இப்றாலெவ்வை (கூட்டுறவு பரிசோதகர்) மூன்றாம் பெயர்வழிகாரர் தானாக விலகிக் கொள்ள அவரின் இடத்துக்கு அகமது லெவ்வை உடையார் உதுமாலெவ்வை (சுல்தான் மரைக்கார்) தெரிவு செய்யப்பட்டு நிர்வாகத்தை நடாத்தி வந்தனர். 1952 ஆம் ஆண்டளவில் இச்சபை விலகிக் கொள்ள பின்வருவோர் 1952ல் கோட் முதலியின் தலைமையில் நியமிக்கப்பட்டனர். அதாவது:

1. டொக்டர் M.M. மீராலெவ்வை (தலைவர்)
2. A.U. உதுமாலெவ்வை (சுல்தான் மரைக்கார்)
3. A.H. அச்சி முகம்மது (அச்சிப் போடியார்)
4. A.H. பக்கீர் முகைதீன் (பக்கீர் முகைதீன் போடியார்)
5. M.I. கலந்தர்லெவ்வை (கலந்தர்லெவ்வை வாத்தியார்)

இவர்களில் மூன்றாம் பெயர்வழிகாரர் இறையடி எய்த, அவரின் இடத்துக்கு T.P.H. ஆதம்லெவ்வை (ஆதம் போடியார்) தெரிவு செய்யப்பட்டார். இவர்களின் ஆட்சியில் பல சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன அந்நேரம் இருந்த பள்ளிவாசல்களான சின்னப்பள்ளி, பெரியபள்ளி, தைக்காப்பள்ளி, கைர்பள்ளி, புதுப்பள்ளி, கலந்தர் சிக்கந்தர் சியாரம், காட்டவுலியா சியாரம், கங்கத்தியப்பா சியாரம், வீரயடியப்பா சியாரம் என்பன வக்பு சட்டத்தின் கீழ் R/0757/BT62 of1.8.1959 ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டு நிர்வகிக்கப்பட்டன.

நிர்வாகம் ஓரளவு சீராக நடைபெற்றன. கைர் பள்ளிவாசல் கல்லால் நிரந்தர பள்ளிவாசலாக கட்ட ஆரம்பிக்கப்பட்டது. இவர்களின் குறிப்பிட்ட காலம் 1962 ஆம் ஆண்டளவில் முடிவுற்றதால் புதிய சபைத் தெரிவிற்கு வழிவிட்டு விலகிக் கொண்டனர். பின்வருவோர் நம்பிக்கையாளர்களாக தெரிவு செய்யப்பட்டனர். அதாவது:

1. U.M. சுலைமாலெவ்வை (ஆலிமுத்தம்பி) – தலைவர்
2. A.U. உதுமாலெவ்வை (சுல்தான் மரைக்கார்)
3. I.L. ஹபீப் முஹம்மது (ஐ மம்மது மனேஜர்)
4. M.M. முகம்மது யாசின் (யாசின் வட்டானை)
5. M.I. அகமதுலெவ்வை (4ம் குறிச்சி விதானை)
6. M.L.M. அப்துல் காதர் ஆலிம் (சின்ன ஆலிம்)
7. M. மகுமூதுலெவ்வை (மகுமூதுலெவ்வை மனேஜர்)

இவர்கள் காலத்தில் மல்கம்பிட்டி மக்களுக்கும் இவர்களுக்கு மிடையில் மல்கம்பிட்டி வட்டையிலுள்ள 79 ஏக்கர் காணிகளும் மல்கம்பிட்டி மக்களாகிய தங்களுக்குச் சேரவேண்டும் என்று அடிக்கடி வழக்கு நடைபெற்றது. இறுதியில் நம்பிக்கையாளர் சபையே வெற்றிகண்டது. இக்காலை இரண்டாம் பெயர்வழிகாரர் இறையடி எய்தினார். ஏனையவர்கள் பள்ளி நிருவாகத்தை சீராக நடத்துவதிலும், கணக்குகள் ஒழுங்காக காட்டுவதிலும் கோட்டைவிட்டனர். இவ்வேளை ஆறாம், ஏழாம் பெயர்வழிகாரர்கள் சுகயீனம் காரணமாக விலகிக் கொண்டனர். ஏனைய நால்வரும் தங்கள் காலம் முடிந்தும் விலகிக் கொள்ளாமலும் புதிய சபை தெரிவதற்கு இடையூறாகவும் இருந்தனர்.

இதை அறிந்த வக்பு சபை வக்பு சட்டத்தின் படி பின்வருவோர் களைக் கொண்ட சபையை விண்ணப்பம் கோரி, நேர்முகப்பரீட்சை நடாத்தி தெரிவு செய்தததது. அதாவது:

1. U.L.M. முகைதீன் (முகைதீன் புரக்டர்)
2. A.L. முகம்மது தம்பி (முகம்மது தம்பி மாஸ்டர்)
3. U.L. கலந்தர்லெவ்வை (UK)
4. S.M. இப்றாலெவ்வை (இப்றாஹிம்ஸ்)

இவர்களையும் வக்பு சபையையும், பொதுமக்களையும் எதிர்த்து U.M. சுலைமாலெவ்வை தலைமையிலான குழுவினர் தங்களின் கீழ் கடமையாற்றிய ஊரதிகாரி M.L. அலியாரையும் தங்களுடன் ஒரு மரைக்காராக சேர்த்துக்கொண்டு கோட் மூலம் தடையுத்தரவு பெற்று நிருவாகத்தை நடாத்த முயற்சித்தனர்.

அப்படி இருந்தும் நிருவாகத்தை சீராக நடத்த முடியவில்லை, பள்ளிவாசல்கள் ஒழுங்காக பராமரிக்கப்படாமலும், பள்ளிவாசல்களுடன் தொடர்புடைய மதரஸா போன்றவைகள் சிறப்பாக நடைபெற ஒத்தாசை புரியாமலும், பள்ளிவாசல் கணக்குகள் ஒழுங்காக காட்டப்படாமலும், பள்ளிவாசல் பணத்தை வீணாக வழக்கில் செலவழித்துக் கொண்டும், தான்தோன்றித் தனமாக நடந்து கொண்டனர்.

அதுமட்டுமல்லாமல் இவர்கள் நிருவாகத்தில் இருந்து இடமின்மையால் புளக் “ஜே“ கிழக்கு, மேற்கு போன்ற பகுதிகளில் பரந்து சென்று குடியேறிய மக்களால் தங்கள் கடமையை நிறைவேற்ற அமைக்கப்பட்ட மஸ்ஜிதுல் ஸலாம் , மஸ்ஜிதுல் ஜாரியா, மஸ்ஜிதுல் அழ்பர் போன்ற பள்ளிவாசல்களை தங்கள் பராமரிப்பில் சேராமலும் விட்டனர். அதனால் மேற்படி பள்ளிவாசல் பகுதியைச் சேர்ந்த மக்கள் விரக்தி அடைந்து, சம்மாந்துறை பள்ளிவாசல் பதிவில் சேரவேண்டியவர்கள் (R/0757/BT62 of1.8.1959) பிரிந்து தனித்தனியாக பதிந்து ஜும்மா போன்றவைகள் நடாத்தவும் தள்ளப்பட்டனர்.

1978 ஆம் ஆண்டளவில் இச்சீர்கேட்டை தாங்க முடியாத அல்ஹாஜ் I. மீராலெவ்வை (மெகிஸ்டோர் ஹாஜியார்) போன்றவர்கள் ஊரின் நிருவாகத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள் என்ற குடிமரைக்கார் சிலரையும் ஒவ்வொரு குடியிலுள்ள இளைஞர்கள் இவ்விருவர்களையும் சேர்த்து “இஸ்லாமிய தொண்டர் சபை” என்ற அமைப்பை ஏற்படுத்தி மேற்கூறிய நம்பிக்கையாளர்களின் சீர்கேட்டை திருத்தவும், வக்பு சபையால் நியமிக்கப்பட்ட நம்பிக்கையாளர்களை நிருவாகம் செய்ய வழிவகுத்துக் கொடுக்கவும், அன்றில் புதிய ஒரு சபையை வக்பு சட்டத்திற்கும் ஊர் நடைமுறைக்கும் ஏற்ப அமைத்து சீரான நிருவாகத்தை சமாதானமான முறையில் நடாத்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இவமைப்பின் போசகராக M.M. இஸ்மாயில் (இன்ஜினியர்), தலைவராக A.R. முகம்மதலி (CTB சேர்மன்), செயலாளராக S.L. ஆதம்பாவா (DE) அவர்களையும் இயங்க மக்கள் கேட்டுக் கொண்டனர். மேற்கூறிய இவர்கள் I. மீராலெவ்வை (மெகிஸ்டோர் ஹாஜியார்), A.H. அப்துல்லாஹ் (I.S.A), S. அப்துல் றாசிக் (அதிபர்), A.H.A. றஹீம் (பிரதம இலிகிதர்), S.A. றஷீட் (ஆசிரியர்) ஆகியோர்களையும் சேர்த்துக் கொண்டு தடையுத்தரவோடு நிருவாகம் நடத்தும் நம்பிக்கையாளர் ஐவருடனும் சமாதானமான முறையில் பேசி வழக்கை வாபஸ் பெற்று வீண்செலவை தவிர்க்கவும் எல்லோரும் சேர்ந்து நிருவாகத்தை சீர்செய்யவும் முயற்சி மேற்கொண்டனர். வழக்கில் சம்பந்தப்பட்ட மரைக்கார்மார் ஒத்துவரவில்லை. அதனால்

இலவசமாக ஆலோசனை வழங்கிய ஜனாப் தாஹா புரக்டர் , MM. முஸ்தபா புரக்டர் அவர்களின் ஆலோசனையின் பெயரில் இடைக்குழுவாக வழக்கில் இணைந்து நீதிபதி அவர்களிடம் இந்த வழக்கை தாமதியாது தீர்த்துத் தருமாறு கோரல் என்ற முடிவுக்கு வந்தனர்.

இதில் இணைந்து கொள்ள சமாதான குழுவில் இணைந்த கொண்டவர்களில் ஐவரைக் கோர ஜனாப்களான M.M. இஸ்மாயில் (இன்ஞினியர்), S.L. ஆதம்பாவா (DE), I.மீராலெவ்வை (மெகிஸ்டோர் ஹாஜியார்) ஆகிய மூவரையும் தவிர ஏனையோர் பல போலிக் காரணங்களைக் கூறி இணைந்து கொள்ள மறுத்தனர். இதை அவதானித்த ஜனாப் M.M. இஸ்மாயில் (இன்ஞினியர்) அவர்கள் தனது தற்றுணிவில் மகன் முறையான ஜனாப் M.A. மேர்ஸா இன்ஞினியர், ஜனாப் A.R. முகம்மதலி (CTB சேர்மன்) அவர்களையும் சேர்த்து வழக்கில் இணைந்து கொண்டனர்.

அப்படி இணைந்தும் தடையுத்தரவு பெற்ற லோயர் அவர்களும், நம்பிக்கையாளரும் தவணைகளை அடுத்த போக குத்தகை வரவுகளை எதிர்பார்த்துக் காலத்தைக் கடத்த முயற்சித்தனர். இதை அவதானித்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட குழுவினரும், பொதுமக்களும் குத்தகை பழைய நம்பிக்கையாளர் சபையின் கைக்கு போகாமல் தடுப்பதே இதற்கு சிறந்த வழியாகுமென தீர்மானம் எடுத்தனர்.

இதை அமுல்படுத்தும் முகமாக காணி கூறும் தினத்தில் குழுவினரும், பொதுமக்களில் சிலரும் சேர்ந்து சபையில் இருப்பது எனவும் காணி கூறும் பணத்தை சிறை செல்ல நேரிடினும் கைப்பற்றுவது எனவும் துணிந்து முன்வந்தனர். இதை அறிந்த பழைய நம்பிக்கையாளர்கள் காணி கூறிக் கொண்டிருக்கும் போதே போலிச் சாட்டுகளைச் சொல்லிக் கொண்டு ஒவ்வொருவராக வெளியேறினர். தலைவரும், காணி கூறிக் கொண்டிருந்த ஊரதிகாரி மரைக்காரும் காசி எண்ணும் வரை இருந்தனர். தலைவர் தானாகவே முன்வந்து காசை தனது சகோதரன் முறையானவரும், குடிமரைக்கார்சார்பில் வந்திருந்த M.A. முகம்மதலி அவர்களிடம் ஒப்படைக்கும் படியும், அடுத்த கிழமை எல்லோரும் சேர்ந்து காசை செலவழித்தல், வழக்கை வாபஸ் பெறல் சம்பந்தமாகவும் ஆலோசிப்பதாக கூறிவிட்டு அவரும் விலகிச் சென்றுவிட்டார்.

முகம்மதலி அவர்கள் காசு தன்னிடமிருப்பது சரியல்ல எனவும் அன்று குடிமரைக்கார் சபை தலைவராக இருந்த அல்ஹாஜ் T.P.H. முகம்மது தம்பி அவர்களிடம் ஒப்படைத்து அடுத்த கிழமை

கூட்டும் பொறுப்பை தொண்டர் சபை செயலாளரான S.L. ஆதம்பாவா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அடுத்த கிழமை தடை உத்தரவோடு இருக்கும் நம்பிக்கையாளர்கள் தடையுத்தரவை மீறமுடியாமல் நிருவாகத்தை கையேற்க முடியாத நியமனம் பெற்ற நம்பிக்கையாளர்கள், பொதுமக்கள் ஆகியோர்களை அழைத்து நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் பின்வருவோர்களைக் கொண்ட இடைக்கால நிருவாக சபை ஒன்றை தெரிவு செய்து காணி கூறிய பணம், முந்திய மரைக்காரர்களிடமிருந்து கொண்டு வரப்பட்ட பாக்கிப் பணம் என்பவற்றை ஒப்படைத்து நிருவாகத்தை சீர் செய்து நிரந்தர சபையை நியமிக்க ஒத்துழைத்தல் என தீர்மானம் எடுக்கப்பட்டது. அதன்படி

1. ஜனாப் M.A.M. மேர்ஸா (இன்ஞினியர்) - தலைவர்
2. ஜனாப் S.L. ஆதம்பாவா (கல்விப் பணிப்பாளர்) செயலாளர், தனாதிகாரி
3. ஜனாப் T.P.H. முகம்மது தம்பி (குடி மரைக்கார் சபைத் தலைவர்)
4. ஜனாப் A. அசனார் (மனேஜர், கூட்டுறவு கிளை சம்மாந்துறை.)
5. ஜனாப் K.H.S. முகிடீன் (குடிமரைக்கார்)

மேற்கூறியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களிடம் சென்ற கிழமை காணி கூறிக் கிடைத்த பணம் கிட்டத்தட்ட 44 ஆயிரம் மட்டுமே ஒப்படைக்கப்பட்டது. வேறு தஸ்தாவேஜுகளோ, கணக்குகளோ, பாக்கிப்பணங்களோ எதுவும் ஒப்படைக்கப்பட வில்லை.

ஆனால் பிரதம நம்பிக்கையாளரால் தங்கள் கணக்கில் பாக்கிப் பணம் 11 ஆயிரம் அளவில் இருந்ததாகவும் அவை பள்ளிவாசல்களுக்குச் செலவழிக்க முன்னைய மரைக்கார்மார்களிடம் பகுந்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களிடம் கணக்குகளையும், பாக்கிப் பணம் இருந்தால் அவற்றையும் பெற்றுக் கொள்ளுமாறு புதிய நம்பிக்கையாளர்களை கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் சிலரின் கணக்குகள் மட்டும் வந்தன வேறு எதுவும் ஒப்படைக்கப்பட்டதாக இல்லை.

புதியவர்கள் தேவையான தஸ்தாவேஜுகளைத் தயாரித்து கிடைத்த பணத்தைக் கொண்டு பள்ளிவாசல்களையும் தங்களின் கீழிருந்த பள்ளிவாசல் நிருவாகத்தையும் சீராக நடாத்தினர்.

இதை அறிந்து வேறாக பிரிந்து, தனிப்பதிவின் கீழியங்கிய சலாம், ஜாரியா, அழ்பர் பள்ளிவாசல் நிருவாகிகளும் மேற்படி இடைக்கால நிருவாகத்தின் கீழ் வரவும், தங்களுக்கும் மேற்படி பள்ளிவாசல்

பணத்தில் செலவழித்து உதவுமாறும் கோரினர். இவர்களின் கோரிக்கையை இடைக்கால சபையினர் நியாயமானதாக ஏற்றுக் கொண்டனர். ஆனால் இவர்களை பள்ளிவாசல் நிருவாகத்தில் இருந்து விலக்கி விடுவது பொருத்தமில்லையென கருதியதாலும் மேற்படி பள்ளிகளுக்கு மட்டும் தனியாகவும், ஏனைய பள்ளிகளுக்கு ஒரு நிருவாகமாகவும் இருப்பது பொருத்தமில்லை யெனவும் கருதிய செயலாளர் S.L. ஆதம்பாவா அவர்களால் பொதுமக்கள் அனைவரையும் பள்ளிவாசல் நிருவாகத்தில் பங்குகொள்ள செய்யக் கூடிய வழியாகவும் எல்லாப் பள்ளிவாசல்களையும் ஒரே குடையின் கீழ் ஒரே மாதிரியான நிருவாகத்தில் கொண்டுவருவதற்காக எல்லா பள்ளி வாசல்களுக்கும் தனித்தனி நிருவாக குழுக்களை அமைத்தல் எனவும் அவர்களையும் அல்லது அவர்களினால் தெரிவு செய்யப்படும் பேராளர்களையும் ஊர் பிரமுகர்களான குடி மரைக்கார்மார்கள் பாராளுமன்ற பிரதிநிதிகள் பட்டின, கிராம சபைத் தலைவர்கள் காதி நீதிபதிகள் உலமா சபைப் பிரதிநிதிகள் மற்றும் ஊரில் அமைந்துள்ள முக்கிய கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர்கள் கொண்ட பொது சபையை ஏற்படுத்தி நிருவாகத்தை சீர் செய்தல் பொருத்தமென ஆலோசனை வழங்கப்பட்டது. அதை இடைக்கால நம்பிக்கையாளர் சபையினரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

அதுமட்டுமல்லாமல் பெரிய பள்ளிவாசலிலுள்ள பொருத்தமான ஒரு அறையை காரியாலயமாக்கி இயங்கத்தொடங்கினர். பள்ளிவாசல் வேலைகள் கூடுதலாக இருந்த படியாலும் அடிக்கடி பணப்பற்றாக்குறை ஏற்பட்டதனால் அதை ஈடுசெய்வதற்கு சில நம்பிக்கையாளர்களால் முற்பணம் வழங்கி செலவு செய்ய வேண்டி ஏற்பட்டதாலும் கணக்காளராக ஓய்வு பெற்றிருந்த A.L. அலியார் அதிபர் அவர்களை குறைந்த வேதனத்தில் நியமித்து அவரின் சேவையையும் பெற்றுக் கொண்டனர். முந்திய மரைக்கார்மார்களின் தடையுத்தரவும் தானாகவே செயலிழந்து போயின.

இந்நிலையில் தடையுத்தரவுக்குப் பயந்து சம்மாந்துறை பள்ளிவாசல்களை தரிசிக்காதிருந்த முஸ்லிம் திணைக்கள பணிப்பாளர் மர்ஹூம் ஜெம்ஸித் ஆரிப் அவர்கள் சம்மாந்துறை பள்ளிவாசல்களுக்கும் சமூகமளித்தார். இவர் பழைய நம்பிக்கையாளர் காலத்திலும் சமூகமளித்து அதிருப்தியோடு சென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இவர் தற்போதைய சீரான நிருவாகத்தையும் பள்ளிவாசல்கள் புனிதமாக பராமரிக்கப் படுவதையும் மிக மிக திருப்தி அடைந்த நிலையில் செயலாளராகிய என்னையும் முடியுமாயின் ஏனைய நம்பிக்கையாளர்களையும் அழைத்து வர ஊரதிகாரியை கேட்டுக்

கொண்டதுடன் பள்ளிவாசல் காரியாலயத்தில் சில மணித்தியாலங்கள் எங்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தார். எனக்கும் இன்னும் சில இடைக்கால உறுப்பினர்களுக்கும் உடன்வரக் கிடைத்தது.

அவர் எங்களைவரவேற்று, எங்கள் நிருவாகத்தை பூரணமாக கேட்டறிந்ததுடன் எங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுச் சபை அமைப்பையும் பள்ளிவாசல் நிருவாக சபை அமைப்பையும் பாராட்டி, இதையிட்ட அறிக்கை ஒன்றை தனக்கு தரவேண்டும் என்றும் இவ்வமைப்பைக் கொண்டு பல ஊர்களில் சண்டையிட்டு பிரிந்து இயங்கும் பள்ளிவாசல்களை ஒன்றுபடுத்தி இயங்க வைக்க இந்த முறையை உபயோகிக்கப் போவதாகவும் அதற்கு தாங்கள் இதை ஒரு யாப்பாக தயாரித்து தரவேண்டும் என்றும் கட்டாயப்படுத்திக் கேட்டுக் கொண்டார். அதுமட்டுமல்லாமல் நாங்கள் விண்ணப்பிக்காமலேயே எங்கள் ஐவருக்கும் 1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் அடுத்த உத்தரவு பிறப்பிக்கும் வரை நம்பிக்கையாளர்களாக நியமனக் கடிதமும் வழங்கியிருந்தார்.

அதன் பின் நடைபெற்ற மேற்படி பொதுச் சபைக் கூட்டத்தில் நம்பிக்கையாளர் சபையில் உலமா ஒருவர் இருத்தல் பொருத்தமென ஆலோசனை கூறப்பட்டது. அதைத் தொடர்ந்து எமது ஆலோசனையின் பெயரில் உலமாவாக மௌலவி A.C.A.M. புஹாரி அவர்களையும் முதன் முதல் நம்பிக்கையாளர் சீவித்த அயல் கிராமமான மல்கம்பிட்டி கிராமத்தில் விதானையாக கடைமையாற்றிக் கொண்டிருந்த M.A. அப்துல் கபூர் அவர்களையும் சேர்த்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. அவர்களையும் சேர்த்து நம்பிக்கையாளர் நியமனக் கடிதம் வழங்குமாறு கோரினோம். அவர்களுக்கும் 1981 பிற்பகுதியில் நியமனம் கிடைத்தது. ஜனாப் M.A. கபூர் அவர்களின் நியமனக் கடிதம் கிடைக்க இருந்த அந்நாள் காலையிலேயே அவர் இறையடி எய்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

வக்பு திணைக்களப் பணிப்பாளரால் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எங்களால் புதுமையானதும் சிறப்பான நிருவாகத்தை ஏற்படுத்தக் கூடியதும் வக்பு சட்டத்திற்கும், தேசவழமைக்கும் இணைந்து செல்லக் கூடியதுமான யாப்பொன்றை தயாரித்து அனுப்பி வைத்தோம். அதை சந்தோஷமாக ஏற்றுக் கொண்ட அவர் அதன் பூரண விளக்கத்தை வக்பு சபை, திணைக்கள உத்தியோகத்தர்கள், கௌரவ அமைச்சர் அல்ஹாஜ் M.H. முஹம்மட், அமைச்சின் செயலாளர் எமது பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ M.A. அப்துல் மஜீட் ஆகியோர் கொண்ட கூட்டத்தில் வழங்குவதற்கு 22.07.1983 ஆம் திகதி அழைத்திருந்தார்.

அதற்கு நம்பிக்கையாளர்களான M.A.M மேர்ஸா, S.L. ஆதம்பாவா, T.P.H. முகம்மது தம்பி, A. அசனார், K.H.S. முஹிடீன் ஆகிய நாங்கள் சமூகமளித்து விளக்கமளித்தோம். எமது விளக்கத்தையும், எங்களால் எழுத்துருவில் சமர்பிக்கப்பட்ட யாப்பையும், சந்தோஷத்துடனும் நன்றியுடனும் ஏற்றுக்கொண்டதுடன் மேலும் தேவையான நடைமுறைகளைச் சேர்த்து பூரணத்துவமிக்க ஒரு யாப்பாக வக்பு சபையின் அங்கீகாரத்திற்கு தந்துதவுமாறு கேட்டுக் கொண்டனர். நாங்களும் 23.07.1983 கலவரத்தில் (83 ஜுலைக் கலவரம்) தப்பி ஊர் வந்து சேர்ந்தவுடன் மேலும் பொதுமக்கள் சமூக சேவை அமைப்புக்களின் ஆலோசனைகளைப் பெற்று தயாரித்து பின்வருவோர்களான,

1. ஜனாப் S.L.ஆதம்பாவா (கல்விப்பணிப்பாளர்)
2. ஜனாப் A.C.A.M. புஹாரி (மௌலவி)
3. ஜனாப் A.H. அப்துல்லாஹ் (ஆசிரிய ஆலோசகர்)
4. ஜனாப் S. அப்துல் றாசிக் (அதிபர்)
5. ஜனாப் M. சின்னலெவ்வை (மனேஜர்)
6. ஜனாப் M.I. கோஸ்முகம்மது (அதிபர்)
7. ஜனாப் U.L.M முகிடீன் (சட்டத்தரணி)

ஆகியோர்களைக் கொண்டு பரிசீலித்ததோடு 01.01.1984 இல் மேலே குறிப்பிட்டதும், பின்பு மஜ்லிஷ் அஷ்ஷுரா என அழைக்கப்படுவதுமான பொதுச்சபையின் அங்கீகாரத்தை பெற்று 01.05.1984 இல் வக்பு சபையின் அங்கீகாரத்திற்கு "சம்மாந்துறை, மல்கம்பிட்டி, கொண்டவட்டுவான் பள்ளிவாசல்கள் சேத்திரங்கள் நம்பிக்கையாளர் சபை பராமரிப்பு" என்ற தலைப்புடன் ஆரம்பகர்த்தாக்களான S.L. ஆதம்பாவா,M.A.M மேர்ஸா (இன்ஜினியர்), T.P.H. முகம்மது தம்பி (குடிமரைக்கார் சபைத் தலைவர்), A. அசனார் (மனேஜர்), K.H.S. முஹிடீன் (குடிமரைக்கார்), A.C.A.M. புஹாரி (மௌலவி) ஆகியோர்களால் அனுப்பி வைக்கப்பட்டது. 20.11.1984 இல் வக்பு சபையால் அங்கீகாரமும் கிடைத்தது. அதன் பின்பு தான் மௌலவி A.C.A.M. புஹாரி அவர்களின் ஆலோசனையின் பெயரில் மஜ்லிஷ் அஷ்ஷுரா என்று மேற்கூறியசபைக்கு நாமம் சூட்டப்பட்டது. அதுமட்டுமல்லாமல் 2003 ஆம் ஆண்டளவில் தலைவர், உப தலைவர், செயலாளர், உப செயலாளர் என்ற பதவிப் பெயர்களுக்கு அமீர், தவிசாளர், செயலாளர் நாயகம், செயலாளர் எனும் பெயர்கள் சூட்டப்பட்டன. 1978 இலிருந்து முதலாவது மஜ்லிஸ் அஷ்ஷுரா சபைக் கூட்டம் ஆரம்பிக்கும் வரைக்குமான காலப்பகுதியில் ஏற்பட்ட அனைத்து செலவுகளும் தடையுத்தரவு வழக்கில் இணைந்து கொண்டவர்களாலும், இடைக்கால நிருவாக சபையினராலும் தமது தனிப்பட்ட முறையில் செலவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி மஜ்லிஷ் அஷ்ஷுரா சபை முதலாவது கூட்டம் 10.11.1985 இல் கூட்டப்பட்டதோடு அமீராக மௌலவி M.B. அலியார் அவர்களும், செயலாளராக S. அப்துல் றாசிக் அவர்களும், உப செயலாளராக K.M. முஸ்தபா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். உப தலைவர்களாக யாப்பின் அடிப்படையில் குடிமரைக்கார் சபைத் தலைவர், நம்பிக்கையாளர் சபைத் தலைவர் போன்றவர்கள் இயங்குவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இதன் பின்பே கோட் முதலியாரின் தலைமையின் கீழ் நம்பிக்கையாளர்களைத் தெரிவு செய்தல், வக்பு சபையினால் விண்ணப்பம் கோரி நம்பிக்கையாளர் தெரிதல் போன்ற முறைகள் ஒழிக்கப்பட்டு 1984 இல் அனுமதி பெறப்பட்ட யாப்பின் அடிப்படையில் மஜ்லிஷ் அஷ்ஷுரா நிர்வாகமே நம்பிக்கையாளர் தெரிவை நிகழ்த்தக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அதன்படி 23.03.1986 இல் கூடிய முதலாவது மஜ்லிஷ் அஷ்ஷுரா பொதுச் சபையில் பின்குறிப்பிடும்

01. பள்ளிவாசல் சியாரங்களின் பிரதிநிதிகளும்,

1. பெரிய பள்ளிவாசல்
2. சின்னப்பள்ளிவாசல்
3. தகிய்யாப்பள்ளிவாசல்
4. கைர் பள்ளிவாசல்
5. புதுப் பள்ளிவாசல்
6. நூர் பள்ளிவாசல்
7. ஜலாலியா பள்ளிவாசல்
8. ஜாரியா பள்ளிவாசல்
9. அழ்பர் பள்ளிவாசல்
10. பத்ர் ஜும்மா பள்ளிவாசல்
11. புஸ்ரா பள்ளிவாசல்
12. ஜபல் பள்ளிவாசல்
13. ஹிலால் பள்ளிவாசல்
14. முனீர் பள்ளிவாசல்
15. பதஹ் பள்ளிவாசல்
16. ஜமாலியா பள்ளிவாசல்
17. சலாம் பள்ளிவாசல்
18. ஹுதா பள்ளிவாசல்
19. மனார் பள்ளிவாசல்
20. ஹமீதியா பள்ளிவாசல்
21. மபாஸா பள்ளிவாசல்
22. முஅல்லா பள்ளிவாசல்
23. சபூர் பள்ளிவாசல்
24. இலாஹியா பள்ளிவாசல்
25. நகர் பள்ளிவாசல்
26. கங்கத்தியப்பா சியாரம்

27.கலந்தர்,சிக்கந்தர் சியாரம்
28. காட்டவுலியா சியாரம்
29. கொண்டவட்டுவான் (வீரயடியப்பா) சியாரம்

02. நடைமுறையிலுள்ள நம்பிக்கையாளர்களும்,

03. பின்குறிப்பிடும் குடிகளின் தலைவர்களும் (31 பேர்கள்)

1. கணக்கன்கத்தர குடி
2. மாமனாப்போடி குடி
3. தேன்முதலி குடி
4. வெள்ளரசன் குடி(பெரிய, சிறிய)
5. சங்கதி குடி
6. இராசம்புள்ள குடி
7. சுல்தான்புள்ள குடி
8. கோசப்பா குடி
9. சேனைக் குடி
10. மாந்தரா குடி
11. ஆதம்பட்டாணி குடி
12. வடக்கனா குடி
13. செட்டிபுள்ள குடி
14. உதுமான்புள்ள குடி
15. உலவிப்போடி குடி
16. சேர்முகம்மது குடி
17. பணிக்கனா குடி
18. பட்டிசிங்கி பவள ஆராய்ச்சி குடி
19. மடத்தடி குடி
20. மாப்பிள்ளை மரைக்கார் குடி
21. கையூம் மலையார் குடி
22. ஓடாவி குடி<br>(நெய்னா, காலிங்கா, தச்சன் ஓடாவி குடிகள்)
23. படையான் குடி<br>(பெரியபடையான், பெரிய படையாண்ட குடி)
24. நாச்சியார் குடி<br>(வைத்தியநாச்சி, மூத்தநாச்சி, பொன்னாச்சி குடிகள்)

04. பாராளுமன்ற உறுப்பினர்கள்
05. பிரதேச செயலாளர்
06. பிரதேச தவிசாளர்
07. காழி நீதிபதிகள்
08. தப்லீகுல் இஸ்லாம், தாறுல் ஹஸனாத், அஸ்ஸாலிஹாத் அரபுக் கல்லூரிகளின் பிரதிநிதிகள்
09. ஜம்யதுல் உலமா சபை பிரதிநிதிகள்
10. ஸகாத் நிதியம், முஅல்லபதுல் குலூப், அல்மஸ்ரபுல் இஸ்லாமிய்யா போன்றவற்றின் பிரதிநிதிகள்
11. அன்றைய மஜ்லிஷ் அஷ்ஷுூரா நிர்வாகிகள்

போன்றவர்கள் அங்கத்தவர்களாக இணைந்து பின் குறிப்பிடுபவர்களை முதலாவது நம்பிக்கையாளர் சபையாக 23.03.1986 இல் தெரிவுசெய்தனர்.

1. ஜனாப் M.A.M. மேர்ஸா (இன்ஞினியர்)
2. ஜனாப் S.L. ஆதம்பாவா (கல்விப் பணிப்பாளர்)
3. ஜனாப் A. முகம்மதலி (கிராம நிலதாரி)
4. ஜனாப் K. அப்துல் றகூல் (அதிபர்)
5. ஜனாப் S. முகம்மது தம்பி (ஹாஜியார்)
6. ஜனாப் M. சின்னலெவ்வை (மனேஜர்)
7. ஜனாப் A. கோஸ்முகம்மது (கிராம நிலதாரி)
8. ஜனாப் M.I. கோஸ்முகம்மது (அதிபர்)
9. ஜனாப் T.P.H. முகம்மது தம்பி
   (குடி மரைக்கார் சபைத் தலைவர்)
10. ஜனாப் A. அசனார் (மனேஜர், கூட்டுறவு கிளை)
11. ஜனாப் K.H.S. முகிடீன் (குடிமரைக்கார்)
12. ஜனாப் A.C.A.M. புஹாரி (மௌலவி)

இவர்களில் தனது வேலைப் பழுவின் காரணமாக 4,8,2,5,10,12 ஆம் இலக்க உறுப்பினர்கள் இடையில் விலகிக் கொள்ள அவரகளின் இடத்துக்குப் பதிலாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டு நம்பிக்கையாளர் சபையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அத்துடன் ஓராம் இலக்க உறுப்பினர் கடைசி நேரத்தில் நின்று கொள்ள மௌலவி MA. முகமதலி அவர்கள் சிறிது காலம் பிரதம நம்பிக்கையாளராக கடமையாற்றியதும் குறிப்பிடத்தக்கது.

1. ஜனாப் I. அலியார் (அதிபர்)
2. ஜனாப் A.S. அப்துஸ் ஸலாம் (விவாகப் பதிவாளர்)
3. ஜனாப் U.M.A. கபூர் (GS)
4. ஜனாப் M.A. தம்பிக்கண்டு (அதிபர்)
5. ஜனாப் M.B. அல்லிலெவ்வை (மனேஜர்)
6. ஜனாப் A.B. ஆமிது லெவ்வை (பரிகாரி)

இதைத் தொடர்ந்து மூன்று வருடத்திற்கு ஒரு முறை யாப்பின் அடிப்படையில் இரண்டாவது நம்பிக்கையாளர் சபையை மஜ்லிஷ் அஷ்ஷுரா 25.12.1989 இல் தெரிவு செய்தது. அதாவது

1. ஜனாப் U.M.A. கபூர் (GS)
2. ஜனாப் M.A. முகம்மதலி (மௌலவி)
3. ஜனாப் M.A. தம்பிக்கண்டு (அதிபர்)
4. ஜனாப் A.C.A.M. புஹாரி (மௌலவி)

5. ஜனாப் M.Y. தாஹா (ஆசிரியர்)
6. ஜனாப் P. மீராலெவ்வை (பதிவாளர்)
7. ஜனாப் A.L. ஹபீப் முஹம்மட் (TA)
8. ஜனாப் M.I. கோஸ்முகம்மது (அதிபர்)
9. ஜனாப் T.M.M. இஸ்மாயில் (வர்த்தகர்)
10. ஜனாப் I. அலியார் (அதிபர்)
11. ஜனாப் K.L. இஸ்மாயில் (வர்த்தகர்)
12. ஜனாப் I.L. அப்துல் கபூர்
13. ஜனாப் A.உதுமாலெவ்வை (நன்னடத்தை அதிகாரி)

இவர்களில் 10வது நபர் விலகிக் கொள்ள அவர் இடத்திற்கு ஜனாப் A.H. அப்துல் றஹீம் (பிரதம இலிகிதர்) இணைந்து கொண்டார்.

மூன்றாவது நம்பிக்கையாளர் சபை 15.12.1992 இல் தெரிவு செய்யப்பட்டது. அதாவது,

1. ஜனாப் U.M.A. கபூர் (GS)
2. ஜனாப் A.C.A.M. புஹாரி (மௌலவி)
3. ஜனாப் M.A. முகம்மதலி (மௌலவி)
4. ஜனாப் U.M. முஹிடின் (அதிபர்)
5. ஜனாப் A. அப்துல் கரீம் (அதிபர்)
6. ஜனாப் M.A. தம்பிக்கண்டு (அதிபர்)
7. ஜனாப் M.I. கோஸ்முகம்மது (அதிபர்)
8. ஜனாப் A.H. அப்துல் றஹீம் (பிரதம இலிகிதர்)
9. ஜனாப் A.H. அப்துல்லாஹ் (ஆசிரிய ஆலோசகர்)
10. ஜனாப் M. அகமது முகிடீன்
11. ஜனாப் A. உதுமாலெவ்வை (நன்னடத்தை அதிகாரி)
12. ஜனாப் M.T. துவான் வபி (ஆசிரியர்)
13. ஜனாப் A. முகம்மது ஹனீபா (மக்கள் வங்கி)

இவர்களில் 4வது நபர் விலகிக் கொள்ள அவர் இடத்திற்கு ஜனாப் A.L. ஹபீப் முஹம்மட் (TA) சேர்த்துக் கொள்ளப்பட்டார்.
நாலாவது நம்பிக்கையாளர் சபை 25.12.1995 இல் தெரிவு செய்யப்பட்டது. அதாவது,

1. ஜனாப் U.M.A. கபூர் (GS)
2. ஜனாப் A.C.A.M. புஹாரி (மௌலவி)
3. ஜனாப் A.L. ஹபீப் முஹம்மட் (TA)
4. ஜனாப் Y.M. ஹாஸிம் (அதிபர்)
5. ஜனாப் A.L. முகிடீன்பாவா (வர்த்தகர்)
6. ஜனாப் M.A. முகம்மதலி (மௌலவி)
7. ஜனாப் A.H. அப்துல்லாஹ் (ஆசிரிய ஆலோசகர்)
8. ஜனாப் M.I. கோஸ்முகம்மது (அதிபர்)
9. ஜனாப் M. அகமது முகிடீன்
10. ஜனாப் M.I. ஆதம்லெவ்வை (மௌலவி)
11. ஜனாப் U.L. முகம்மது அபூபக்கர் (வர்த்தகர்)
12. ஜனாப் M.A. தம்பிக்கண்டு (அதிபர்)
13. ஜனாப்M. மீராலெவ்வை(வ.வி)

ஐந்தாவது நம்பிக்கையாளர் சபை 13.12.1998 இல் தெரிவு செய்யப்பட்டது. அதாவது.

1. அல்ஹாஜ் U.M.A. கபூர் (GS)
2. அல்ஹாஜ் A.C.A.M. புஹாரி (மௌலவி)
3. அல்ஹாஜ் A.H. அப்துல்லாஹ் (ஆசிரிய ஆலோசகர்)
4. அல்ஹாஜ் A.L. ஹபீப் முஹம்மட் (TA)
5. அல்ஹாஜ் M.A. தம்பிக்கண்டு (அதிபர்)
6. அல்ஹாஜ் ஹாபிஸ் A. அச்சிமுகம்மது மௌலவி
7. அல்ஹாஜ் M. அகமது முகிடீன்
8. அல்ஹாஜ் A.H. அப்துல் றஹீம் (பிரதம இலிகிதர்)
9. அல்ஹாஜ் P.M. இஸ்மாயில் (ஆங்கில ஆசிரியர்)
10. அல்ஹாஜ் A.L. அப்துல் ஜப்பார் (அதிபர்)
11. ஜனாப் A.M. றசீது (கணக்காளர்)
12. அல்ஹாஜ் A.L. முகையதீன்பாவா (வர்த்தகர்)
13. ஜனாப் U.L.M இஸ்மாயில் (வர்த்தகர்)

இவர்களில் 10வது நபர் இறையடி எய்த அவர் இடத்திற்கு அல்ஹாஜ் M.L. அப்துல் மஜீத் (வன பரிபாலன அதிகாரி) இணைந்து கொண்டார். அதுமட்டுமல்லாமல் இத்தெரிவின் போது ஒரு சில ஆதரவாளர்களான செயலாளர்நாயகம், தவிசாளர், அமீர் போன்றவர்கள் அல்ஹாஜ் A.H. அப்துல்லாஹ் அவர்களை பிரதம நம்பிக்கையாளராக்க முயற்சி மேற்கொண்டனர். அது ஜனநாயக முறையில் முடியாமற் போக பிரதம நம்பிக்கையாளராக இருந்த

அல்ஹாஜ் U.M.A. கபூர் அவர்களின் விட்டுக்கொடுப்புடன் அல்ஹாஜ் A.H. அப்துல்லாஹ் அவர்கள் சிறிது காலம் பிரதம நம்பிக்கையாளராக கடமையாற்றினார். கடமையாற்றும் போதே இறையடி எய்தினார். அதைத் தொடர்ந்து அல்ஹாஜ் A.C.A.M. புஹாரி அவர்கள் பிரதம நம்பிக்கையாளராக பதவியேற்றுக் கொண்டார்.

ஆறாவது நம்பிக்கையாளர் சபை 2002-2003 இல் தெரிவு செய்யப்பட்டது. அதாவது,

1. அல்ஹாஜ் A.C.A.M. புஹாரி (மௌலவி)
2. அல்ஹாஜ் P.P கிதிர் முகம்மது (அதிபர்)
3. அல்ஹாஜ் A.L. ஹபீப் முஹம்மட் (TA)
4. அல்ஹாஜ் M.I. ஆதம்லெவ்வை (மௌலவி)
5. அல்ஹாஜ் M.A. தம்பிக்கண்டு (அதிபர்)
6. அல்ஹாஜ் A.M. சஹீட் (அதிபர்)
7. அல்ஹாஜ் Z.A.M. யாஸீன் (மௌலவி)
8. அல்ஹாஜ் M.Y. அப்துல் ஜலீல் (ஆசிரியர்)
9. அல்ஹாஜ் I.L. அப்துல் கபூர் (மௌலவி)
10. அல்ஹாஜ் A.L. இஸ்மாலெவ்வை (அதிபர்)
11. அல்ஹாஜ் K.L. சுலைமாலெவ்வை (அதிபர்)
12. அல்ஹாஜ் U.L. அப்துல் கபூர்
13. ஜனாப் U.L.M இஸ்மாயில் (வர்த்தகர்)

2002.10.19 இல் கூடிய மஜ்லிஷ் அஷ்ஷூரா கூட்டத்தில் பள்ளிவாசல்களின் தொகை கூடியதால் அமைப்பு விதிகளில் சில மாற்றங்கள் செய்ய வேண்டுமென தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்காகபின்வருவோர்களைக் கொண்ட திருத்தக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அதாவது அல்ஹாஜ் S.L. ஆதம்பாவா (DE), A.L. அலியார் (அதிபர்), S.M. இப்றாஹிம் (வங்கி முகாமையாளர), M. யாசின்பாவா (பொதுமுகாமையாளர் கூட்டறவு சபை), A.M. புவாத் (ஆசிரியர்), M.T.M. றாசிக்(PM), A.L.M. யாசின் (JP, ஓய்வுபெற்ற ஆசிரியர்), I.M. இப்றாஹிம் (தவிசாளர், பிரதேச சபை), A.M. றபீக் (அதிபர்), S. அப்துல் றாசிக் (செயலாளர் நாயகம், மஜ்லிஷ் அஷ்ஷூரா). இக்குழுவினர் பலமுறை கூடி "மஜ்லிஷ் அஷ்ஷூரா பள்ளிவாசல்கள் பராமரிப்பு அமைப்பு விதிகள்" என்ற தலைப்பில் 2004.08.03 இல் யாப்பு தயாரிக்கப்பட்டு 13.06.2004 இல் வக்பு சபையின் அங்கீகாரம் பெற்று 2005 இல் இருந்து அமுல்படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஏழாவது நம்பிக்கையாளர் சபை 2004-2006 இல் தெரிவு செய்யப்பட்டது. அதாவது,

1. அல்ஹாஜ் A.C.A.M. புஹாரி (மௌலவி)
2. அல்ஹாஜ் P.P கிதிர் முகம்மது (அதிபர்)
3. அல்ஹாஜ் A.L. ஹபீப் முஹம்மட் (TA)
4. அல்ஹாஜ் M.L. அப்துல் வாஹித்
5. அல்ஹாஜ் M.A. தம்பிக்கண்டு (அதிபர்)
6. அல்ஹாஜ் K.L. சுலைமாலெவ்வை (அதிபர்)
7. அல்ஹாஜ் K.M. மஸாஹிர் காரியப்பர் (PM)
8. அல்ஹாஜ் A.B. சுலைமாலெவ்வை (GSN)
9. அல்ஹாஜ் S.L. அப்துல் றசீத் (குவாஸி)
10. அல்ஹாஜ் M.Y.A. றகீப் (மௌலவி)
11. அல்ஹாஜ் ஹாபிஸ் M.I. அச்சிமுகம்மது மௌலவி
12. அல்ஹாஜ் A.L.M. யாஸீன் (மௌலவி)
13. அல்ஹாஜ் A.L.M. இக்பால் (GSN)
14. அல்ஹாஜ் U.L. முகம்மதலியார்
15. அல்ஹாஜ் S.L. உசைனார் (அதிபர்)
16. அல்ஹாஜ் A.S.M. புஹாரி (JP)

20.02.2008 இல் நடைபெற்ற நம்பிக்கையாளர் தெரிவில் ஏற்பட்ட சில தவறுகள் காரணமாகவும் தங்கள் சக உறுப்பினர்களின் யாப்புக்கு முரணான செயற்பாடுகளை சரிசெய்ய முடியாமல் போனமையாலும் செயலாளர் நாயகம் அவர்கள் தமது பதவியை இராஜினமாச் செய்து விலகிக்கொண்டார்.

எட்டாவது நம்பிக்கையாளர் சபை 2008 இல் தெரிவு செய்யப்பட்டது. அதாவது,

1. அல்ஹாஜ் P.P கிதிர் முகம்மது (அதிபர்)
2. அல்ஹாஜ் S. சுலைமாலெவ்வை
3. அல்ஹாஜ் K.M. முஸ்தபா (JP)
4. ஜனாப் U.L. அப்துல் றசீட் (ஆசிரியர்)
5. அல்ஹாஜ் K.L. சுலைமாலெவ்வை (அதிபர்)
6. அல்ஹாஜ் மௌலவி K.L. ஆதம்பாவா (ஆசிரியர்)
7. அல்ஹாஜ் மௌலவி K.M.K.A. றம்ஸின் காரியப்பர்
8. அல்ஹாஜ் K.M. மஸாஹிர் காரியப்பர் (PM)
9. அல்ஹாஜ் M.A. தம்பிக்கண்டு (அதிபர்)
10. அல்ஹாஜ் A.L. ஹபீப் முஹம்மட் (TA)

11. அல்ஹாஜ் A.B. சுலைமாலெவ்வை (GSN)
12. அல்ஹாஜ் S.L. உசைனார் (அதிபர்)
13. அல்ஹாஜ் U.L. முகம்மதலியார் (வர்த்தகர்)
14. ஜனாப் U.L.M இஸ்மாயில் (வர்த்தகர்)
15. ஜனாப் I.L. மஹ்றூப் (வர்த்தகர்)
16. ஜனாப் M.T. மர்சூக்
(இடையில் இணைத்துக்கொள்ளப்பட்டவர்)

அதன்பின் I.A. வஹாப் அவர்கள் செயலாளர் நாயகமாகவும் M.T.A. கபூர் அவர்கள் செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களினால் விடப்பட்ட பிழைகள் முன்னைய செயலாளர், செயலாளர் நாயகம் போன்றவர்களால் விடப்பட்ட பிழைகளை விட கூடுதலாக இருந்ததால் அதை சீர்செய்ய பொதுமக்கள் வக்பு சபை வரை சென்று வழக்காடி திருத்தவேண்டி ஏற்பட்டது. அத்திருத்தத்தை நிறைவேற்ற 08.12.2012 கூடிய மஜ்லிஷ் அஷ்ஷுரா பொதுச்சபையினால் பின்வருபவர்களான I.A. வஹாப் (TA), A.L.M. யாசின் (ஆசிரியர்), M.M. சலீம் (GNS), S. அப்துல் றாசிக் (அதிபர்), M.T.A.கபூர் (GNS) ஆகியோர்களை தெரிவுசெய்து வக்பு சபைக்கு அறிவித்தனர். வக்பு சபையினர் தமது 26.12.2012 ஆம் திகதிய அமர்வில் ஜனாப் S.L. ஆதம்பாவா (DE) அவர்களை இக்குழுவிற்கு தலைமை தாங்கி மேற்படி யாப்பில் ஏற்பட்ட பிழைகளை திருத்தித் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு இணங்க மேற்படி குழுவினர் ஜனாப் S.L. ஆதம்பாவா அவர்கள் தலைமையில் பல முறை கூடி திருத்தங்களை மேற்கொண்டதுடன் "மஜ்லிஷ் அஷ்ஷுரா சம்மாந்துறை, மல்கம்பிட்டி, கொண்டவட்டுவான் பிரதேசங்களில் அமைந்துள்ள பள்ளிவாசல், சேத்திரங்கள் என்பவற்றை பராமரிப்பதற்கும், பாதுகாப்பதற்கும், அதனை நிர்வகிப்பதற்குமான சபைகளை நிறுவுவதற்கான அமைப்பு விதிகள்" என்ற தலைப்பில் 23.08.2013இல் வக்பு சபையின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவ்யாப்பு வக்பு சபையால் 25.02.2016இல் அங்கீகரித்து 11.05.2016இல் அனுப்பி வைக்கப்பட்டது. அன்றிலிருந்து அமுலுக்கு வருவது குறிப்பிடத்தக்கது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் 2011, 2013ஆம் ஆண்டுகளில் பின்வரும் இரு சபைகள் நியமிக்கப்பட்டு இயங்கியதும் குறிப்பிடத்தக்கது.

அதாவது ஒன்பதாவது நம்பிக்கையாளர் சபை 2011 இல் தெரிவு செய்யப்பட்டது.

1. அல்ஹாஜ் I. அப்துல் ஜப்பார் (JP)
2. அல்ஹாஜ் A.L. ஹபீப் முஹம்மட்
3. ஜனாப் U.L. அப்துல் றசீட் (ஆசிரியர்)

4. அல்ஹாஜ் S. சின்னலெவ்வை (நில அளவையாளர்)
5. அல்ஹாஜ் K.L. சுலைமாலெவ்வை (அதிபர்)
6. அல்ஹாஜ் M.T. முகம்மது றாசிக் (PM)
7. அல்ஹாஜ் S.L. உசைனார் (JP)
8. அல்ஹாஜ் மௌலவி K.M.K.A. றம்ஸின் காரியப்பர்
9. அல்ஹாஜ் மௌலவி U.L. மஹ்றூப் (ஆசிரியர்)
10. அல்ஹாஜ் M.T. முகம்மது நஸீர் (GSN)
11. அலஹாஜ் M.I. முகம்மது தம்பி(JP)
12. அல்ஹாஜ் S. சுலைமாலெவ்வை
13. அல்ஹாஜ் K.M. முஸ்தபா (JP)
14. ஜனாப் A. ஆப்தீன் (ADE)
15. அல்ஹாஜ் M.A.M. ஹுசைன் (ஆசிரியர்)
16. ஜனாப் M.B. நளீம் (பொறியியலாளர்)
17. அல்ஹாஜ் P.T. முகம்மது இஸ்மாயில்

பத்தாவது நம்பிக்கையாளர் சபை 29.09.2013 இல் தெரிவு செய்யப்பட்டது.

1. அல்ஹாஜ் Dr. M.Y.M. முஸ்தபா
2. அல்ஹாஜ் K.M. முஸ்தபா (JP)
3. அல்ஹாஜ் M.M. ஸலீம் (JP)
4. அல்ஹாஜ் மௌலவி M.Y. அகமது ஜலீல் (JP)
5. அல்ஹாஜ் M.T. முகம்மது றாசிக் (PM)
6. அல்ஹாஜ் மௌலவி K.M.K.A. றம்ஸின் காரியப்பர்
7. அல்ஹாஜ் மௌலவி U.L. மஹ்றூப் (ஆசிரியர்)
8. அல்ஹாஜ் மௌலவி M.L. முஹம்மது சாஹிர் (ஆசிரியர்)
9. அல்ஹாஜ் மௌலவி M.B. ஆதம்லெவ்வை (JP)
10. அல்ஹாஜ் S.L. உசைனார் (JP)
11. அல்ஹாஜ் S. சுலைமாலெவ்வை(வர்த்தகர்)
12. அல்ஹாஜ் A.P. சுலைமாலெவ்வை (GSN)
13. அல்ஹாஜ் I.L. முஹம்மது பரீட் (GSN)

பொதுவாக கூறின் மஜ்லிஸ் அஷ்ஷுரா நிர்வாகம் 2008 ஆம் ஆண்டு வரை யாப்புக்கு அமைவாக ஒழுங்காக நடைபெற்று வந்தது. அதன்பின் யாப்பின் விதிகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக திருத்தமும் விரிவும் தேவைப்பட்டன. அதனால் மஜ்லிஷ் அஷ்ஷுராவினதும் வக்பு சபையினதும் இணக்கப்பாட்டுடன் ஜனாப்களான S.L. ஆதம்பாவா, I. அப்துல் வஹாப், A.L.M. யாசின், M.M. சலீம், S.A. அப்துல் றாசிக், M.T.A. கபூர் ஆகியோர்களைக் கொண்ட யாப்புத் திருத்த

சபை நியமிக்கப்பட்டது. இச்சபையால் மஜ்லிஷ் அஷ்ஷூரா சம்மாந்துறை, மல்கம்பிட்டி, கொண்டவட்டுவான் பிரதேசங்களில் அமைந்துள்ள பள்ளிவாசல்கள், சேத்திரங்கள் என்பவற்றை பராமரிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் அதனை நிருவகிப்பதற்குமான அமைப்பு விதிகள் என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்டு 23.08.2013இல் அனுப்பி 25.02.2016 ல் வக்பு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது.

இவ் யாப்பின் அடிப்படையில் மஜ்லிஷ் அஷ்ஷூரா சபை மேலும் சிறப்பாகவும் சுதந்திரமாகவும் இயங்கி வரத்தக்க வகையில் 23.09.2016 ஆம் திகதி கூடிய பொதுச் சபையில் அமீராக அஷ்ஷெய்ஹ் M.I.M. அமீர் (Add.GA), தவிசாளராக அல்ஹாஜ் I.A. ஜப்பார் (ADA), பொதுச்செயலாளராக அல்ஹாஜ் M.T.M. றாசிக் (PM), செயலாளராக ஜனாப் M.T.M. அன்சார் (Medical Rap) என்பவர்களைக் கொண்ட சபையை அமைத்து நிருவாகம் ஒப்படைக்கப்பட்டது. இச்சபை முன்னைய சபைகளை விட சிறந்து விளங்க ஆசிக்கின்றேன். அல்லாஹ்வும் துணைபுரிவானாக! ஆமின்.

**எஸ். எல். ஆதம்பாவா JP**
ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்,
63, மத்திய வீதி, சம்மாந்துறை.07.

**யாப்பு திருத்தங்கள் (சுருக்கமான பார்வையில்)**

- முதலாவது யாப்பு - 01.01.1984 - 01.05.1984
- இரண்டாவது யாப்பு - 03.08.2004 - 13.06.2004
- மூன்றாவது யாப்பு - 23.08.2013 - 25.02.2016

# இணைப்பு

❖ **பத்தாவது நம்பிக்கையாளர் சபையில் சேர்க்கப்பட வேண்டியவர்கள்:-**

14. அல்ஹாஜ் MLM. ஹனீபா (JP)
15. ஜனாப் AB.முகைதீன் பாவா

❖ **பதினோராவது நம்பிக்கையாளர் சபையாக 2017 இல் தெரிவு செய்யப்பட்டவர்கள்:-**

1. அல்ஹாஜ் KM. முஸ்தபா (JP) (ஓய்வுபெற்ற அதிபர்)
2. அல்ஹாஜ் IL. றசீட் (ஆசிரியர்)
3. அல்ஹாஜ் AMM. சஹீட் (ஓய்வுபெற்ற அதிபர்)
4. அல்ஹாஜ் A. சுலைமாலெவ்வை
5. அல்ஹாஜ் A. முஹம்மது றசீட் (கணக்காளர்)
6. அல்ஹாஜ் மௌலவி ULM. சலாஹுதீன் (ஆசிரியர்)
7. அல்ஹாஜ் மௌலவி ULM. மஹ்றூப் (ஆசிரியர்)
8. அல்ஹாஜ் IL. அப்துல் வஹாப் (TA)
9. அல்ஹாஜ் MHM. ஹாரிஸ்
10. அல்ஹாஜ் மௌலவி KMK. றம்சின் காரியப்பர்
11. அல்ஹாஜ் AB. சுலைமாலெவ்வை (GS)
12. அல்ஹாஜ் ARM. அன்வர்
13. அல்ஹாஜ் மௌலவி AL. அப்துல் றஹ்மான்
14. அல்ஹாஜ் மௌலவி AL. சறூக்
15. அல்ஹாஜ் மௌலவி MY. அஹமட் ஜலீல் (ஆசிரியர்)
16. அல்ஹாஜ் MM. சலீம் (GS)
17. அல்ஹாஜ் IL. பரீட் (GS)
18. அல்ஹாஜ் SL. உசனார் (ஓய்வுபெற்ற அதிபர்)
19. அல்ஹாஜ் MLM. ஹனீபா (JP)
20. அல்ஹாஜ் UL. அப்துல் காதர்
21. அல்ஹாஜ் SL. சுலைமாலெவ்வை (வ.வி)

இவர்களில் 3,8,14 ஆகியவர்கள் இடையில் விலகிக் கொள்ள அவர்களின் இடத்திற்கு பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

1. அல்ஹாஜ் MB. முஹம்மது மன்சூர்
2. அல்ஹாஜ் MI. முஹம்மது தம்பி
3. அல்ஹாஜ் அஷ்ஷேய்க் MM. அப்துல் கபூர்

250/=

978-955-38050-0-3

**Rose Printers**